1969 மார்ச் 7]

திரு. டி. எஸ். ஆதிமூலம் : நர்சுகளுக்குக் கொடுக்கப்படும் உணவைப் பற்றி எல்லோரும் கவலைப்படுவதாகத் தெரிகிறது. ஃபிமேல் நர்சா, மேல் நர்சா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நர்ஸ் என்று சொல்லுவது மகளிர் ஆடவர் இருவரையும் சேர்த்துத்தான்.

இடைக்கழி நாட்டில் பயணிகள் விடுதி.

* 214 வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இடைக்கழி நாடு பகுதிக்கு உல்லாசப் பயணிகள் அதிகம் வருவதால் இங்கு ஓர் பயணிகள் விடுதி கட்டுகின்ற உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : அந்தப் பகுதியிலே மொகலாய சாம்ராஜ்ய காலத்தில் கட்டப்பட்ட பல கோட்டைகள் இருக்கின்ற காரணத்தாலும், பக்கிங்காம் கனல் ஒரு பக்கம் செல்லுகின்ற காரணத்தாலும் அது தமிழகத்தின் கேரளம் என்று சொல்லப்பட்டிருப்பதால் இனிமேலாவது அதற்கான ஒரு நடவடிக்கையை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அது குறித்துச் செயற்குறிப்பு இல்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் இவ்வளவு தூரம் சொல்லுவதால் அது குறித்த தகவல்கள் அரசாங்கத்திற்கு வருமானுல் அதைப்பற்றிப் பரிசிலனை செய்யலாம்.

திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனை.

* 215 வினா—**திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி அரசினர் மருத்துவமனைக் கட்டடத்தைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. ந. தருமலிங்கம் : திருத்துறைப்பூண்டி பேரூர் ஆட்சி பதினைந்தாயிரத்திற்கும் அதிகமான மக்களைக் கொண்டது என்பது மட்டுமல்ல, அந்த நகரத்தை ஒட்டி 20 மைல் சுற்றளவில் சிறந்த மருத்துவ மனை இல்லாத காரணத்தால் இருக்கிற திருத்துறைப்பூண்டி மருத்துவமனையைச் செப்பனிட அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அந்த அவசியத்தை உணர்ந்துதான் இப்போது 24 படுக்கைகள்கொண்ட ஒரு புதிய வார்டைக் கட்டுவதற்கான செயற்குறிப்பு பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு விரைவில் பொதுப்பணித் துறைமூலமாகக் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன. புதிய மருத்துவ மனை கட்டும் செயற்குறிப்பு எதுவும் இல்லை. இருக்கின்ற மக்கள் தொகையை அனுசரித்துத்தான் புதிய வார்டைக் கட்ட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்- விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு.**—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*)இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

(அ) சில மாவட்டங்களில் பருவ மழையின்மையும், பஞ்ச நிவாரண வேலைகளும்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மற்றும் தென்னாற்காடு மாவட்டத்தில் திண்டிவனம், செஞ்சி ஆகிய வட்டங்களில் பருவ மழை தவறியதால் மேற்படி பகுதிகளைப் பஞ்சப் பிரதேசமாக